வெளியிடுபவர் தொடர்பூட்டல் திணைக்களம்

2021.02.25



## மத்திய வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் திரு. சி. ஜே. பி. சிறிவர்த்தன காலமானார்

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் திரு. சி. ஜே. பி சிறிவர்த்தன அவர்களின் மறைவினை அறிவிப்பதில் மத்திய வங்கி ஆழ்ந்த கவலையடைகின்றது. அவர் 2021.02.24 அன்று தனது 62ஆவது வயதில் காலமானார்.

திரு. சிறிவர்த்தன 2017 தொடக்கம் 2018 வரை இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநராகப் பணியாற்றினார். இலங்கை மத்திய வங்கியில் 31 வருடங்களுக்கும் மேற்பட்ட சேவையுடன் இவர் பொருளாதாரம் விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் முகவர் தொழிற்பாடுகளிலும் விசேட அனுபவத்தினைப் பெற்றவராவார். துணை ஆளுநர் பதவியில் திரு. சிறிவர்த்தன வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை, பொதுப்படுகடன், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள், நிதி, செயலகம், தகவல் தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு பணிகள் ஆகிய திணைக்களங்களை மேற்பார்வை செய்தார். இவர் நாணயக் கொள்கைக் குழு, ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களுக்கிடையிலான குழு, நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் உறுப்பினர் ஒருவராக செயற்படுவதற்கு மேலதிகமாக தேசிய கொடுப்பனவுகள் சபை, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு, மற்றும் திறைசேரி முறிகள் அத்துடன் திறைசேரி உண்டியல்கள் விலைக்கோரல் சபைகளின் தலைவராக இருந்தார்.

துணை ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், உதவி ஆளுநராக பதவியிலிருந்த திரு. சிறிவர்த்தன அவர்கள் பொதுப்படுகடன், தகவல் தொழில்நுட்பம், சட்டம் மற்றும் இணங்குவிப்பு, பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு, மனித வளங்கள், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் போன்ற திணைக்களங்களுக்குப் பொறுப்பாக இருந்தார். திரு சிறிவர்த்தன இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கான செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது பதவிக் காலத்தில் திரு சிறிவர்த்தன இலங்கை மத்திய வங்கியின் நீண்டகாலப் பணியில் அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினைப் பிரதிபலித்து பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு மன்றங்களுக்கு தனது பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

சிறந்த புத்திஜீவியான திரு. சிறிவர்த்தன ஐக்கிய இராச்சியத்தின் வோவிக் பல்கலைக்கழகத்திலிருந்து கணியம்சார் அபிவிருத்திப் பொருளாதாரத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்தையும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் உருகுணைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மையில் விஞ்ஞானமானிப் பட்டத்தினையும் பெற்றவராவார்.

திரு. சி. ஜே. பி. சிறிவர்த்தன அவர்களின் பூதவுடல் பெப்புருவரி 25 அன்று (இன்று) பி.ப. 3.00, விஜபி லோன்ஜ், ஜயரத்ன மலர்ச் சாலையில், “த ரெஸ்பெக்ற்” இல் வைக்கப்பட்டுள்ளது. தகனக் கிரியை பெப்புருவரி 26 (நாளை) பி.ப 5.30 மணிக்கு பொரளை பொது மயானத்தில் இடம்பெறும்.